# வீடு

உரிமை வேட்கையின்
உன்னத சின்னம்


எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே - இதை
வந்தனை கூறி மனதில் இருத்தி என்
வாயுற வாழ்த்தேனோ




மலர் 01 | வீடு வார சஞ்சிகை | 27.07.2020 திங்கட்கிழமை | இதழ் 01


# தந்தை செல்வாவின் பாதை சாத்வீகப் போராட்டம்
# தலைவர் பிரபாகரனின் பாதை ஆயுதப் போராட்டம்
## ஆயுதப் போராட்டத்தின் தொடர்ச்சியான ஜனநாயகப் போராட்டம் எமது பாதை



பாராளுமன்றில் மக்கள் பிரதிநிதியாக...



சங்கானையை நகரமயமாக்கும் முகமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் பெருமுயற்சியினால் அமைக்கப்பட்ட சங்கானை நவீனசந்தை கட்டடத்தொகுதி



**01.03.1957 ஆம் ஆண்டு இலங்கையின் தேசியக் கொடி பற்றிய விவாதம் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றபோது தந்தை செல்வா அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி...**

தேசிய ஒருமைப்பாடு என குரல் எழுப்பப்படுகின்றது. இந்த ஒருமைப்பாடு ஒவ்வொரு இனத்திற்கும் தமக்கே உரிய தனித்துவத்தைப் பேணும் வகையிலும் ஒருவரை ஒருவர் மதிக்கும் வகையிலும் சமத்துவ நல்லுறவின் அடிப்படையில் அமைய வேண்டுமேயொழிய இன அழிப்பு முறையில் அல்ல. குடியிருப்புக்கள் மொழியுரிமையிலும் ஏனைய விடயங்களிலும் சரி, உங்களிலும் பார்க்க சிறிய இனங்களை இன்னல்படுத்தி அழித்தொழிக்கும் நோக்குடன் செயற்படுகின்றீர்கள். இந்த அடிப்படையில் ஒற்றுமையோ அல்லது நீங்கள் கூறும் ஒருமைப்பாடோ தலை தூக்க முடியுமா?


இலங்கை தமிழரசுக் கட்சி

4 X

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

சங்கானையின் மைந்தன்

ஈ.சரவணபவன்



உரிமைக்குக் குரல் கொடுப்போம் உயர்வுக்கு வழி சமைப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியப் பாதையில் விருப்பு வாக்குகள்

இது ஒரு தேர்தல் காலம் எமது வாக்குகளை வேண்ட எம்மீது கொலை, கொள்ளை, காணாமலாக்குதல் எனப் பல கொடுமைகள் செய்தவர்கள் வருவார்கள்.

தமிழர்களின் விமோசனத்திற்கு உழைப்பவர்கள் என்ற பெயரில் தமிழ் மக்களின் உரிமைகளை எதிரிகளுக்கு விலை பேசுபவர்களும் வருவார்கள். அந்நிய உளவு நிறுவனங்களால் உரிமைப் போராட்ட அமைப்புகளுக்குள் உட்புகுத்தப்பட்டு எமது போராட்டத்தைச் சீர்குலைப்பவர்களும் வருவார்கள்.

எமது நியாயமும், அர்ப்பணிப்பும், வீரமும் நிறைந்த விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்றும் போர்க்குற்றங்கள் எனவும் கொச்சைப்படுத்துபவர்களும் வருவார்கள்.

உரிமைப் போராட்டத்தில் துணிச்சலுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும், இழப்புக்கள் கண்டு பின்வாங்காமல் மக்கள் மத்தியில் நின்று மக்கள் பணி செய்பவர்களும் வருவார்கள்.

இப்படியான வெவ்வேறு நோக்கம் கொண்டவர்கள் வெவ்வேறு கட்சிகளிலும் இருந்து வருவார்கள். ஒரே கட்சியிலும் வருவார்கள்.

ஒரே கட்சியில் நல்ல சக்திகளும், கெட்ட சக்திகளும் வரும்போது அவர்களை இனம் கண்டு ஏற்றுக் கொள்ளவும், நிராகரிக்கவும் எமக்குக் கிடைத்த ஆயுதங்கள் தான் விருப்பு வாக்குகள்.

தலைவர் பிரபாகரனாலும், எமது போராளிகளாலும் ஆயுதப்போராட்டம் மூலம் முன்னெடுக்கப்பட்ட எமது உரிமைப் போராட்டத்தைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்கிறது.

எனவே எந்தக் கட்சிக்கு வாக்களிப்பது என்பதைத் தெரிவு செய்வதற்கு கேள்விகளுக்கு இடமில்லை. கட்சிகளால் நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள் மத்தியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் உரிமை வாக்காளர்களுக்கு உண்டு. கட்சியால் முன்னிலைப் படுத்தப்படும் வேட்பாளர்களில் மூவருக்கு விருப்பு வாக்குகளை வழங்கவும், ஏனையோரை நிராகரிக்கவும் வாக்காளர்களுக்கு உரிமையுண்டு.

எனவே எமது தலைவராலும் மாவீரர் போராளிகளாலும் முன்னெடுக்கப்பட்ட எமது விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் எனக் கொச்சைப்படுத்துபவர்களுக்கும், போர்க்குற்ற விசாரணை முடிந்துவிட்டதெனக் கூறி சிங்கள அரசைக் காப்பாற்றியவர்களுக்கும் வாக்களிப்பதா? என்ற கேள்வி எம்முன் எழுந்து நிற்கின்றது.

எமது விருப்பு வாக்குகள் மூலம் நேர்மையான இலட்சிய உறுதி கொண்ட வேட்பாளர்களைத் தெரிவு செய்து எமது உரிமைப் போராட்டப் பாதையில் உறுதியுடன் முன் செல்வோம்.

**விவசாயம், மீன்பிடி, சீவல் தொழில் ஒவ்வொரு துறையிலும் எமது மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கச் சிங்கள ஆட்சியாளர்கள் எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் எமது நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்கள் பொங்கியெழுந்து ஆற்றிய உரைகள்.**

## நலிவடைந்த கடலுணவு உற்பத்தி மீண்டும் சிறக்க வேண்டும்

ஒரு காலத்தில் மயிலிட்டி மீன் லொறிகள் போனால் தான் புறக்கோட்டை மீன்சந்தை துயிலெழுமென கூறும் அளவுக்கு எமது கடல் உணவை தென்னிலங்கை எதிர்பார்த்து காத்திருக்குமளவுக்கு எமது கடல் தொழில் மேம்பட்டிருந்தது போர்க்காலத்தில் கடலில் கடற்படையினரால் மீனவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிகள் அச்சுறுத்தல்கள் காரணமாகவும் போக்குவரத்துகளில் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகள் காரணமாகவும் அந்த நிலை இல்லாமல் செய்யப்பட்டது. ஆனால் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 10 வருடங்களாகிவிட்டபோதிலும் அன்றைய நிலைமை மீண்டும் ஏற்படவில்லை என்பதை உங்கள் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறோம்.

இப்படியான ஒரு நிலைமை நிலவுவதற்கு வேறுபட்ட காரணங்கள் இருந்த போதிலும் நான் இங்கு இரு முக்கிய காரணங்களை குறிப்பிட விரும்புகிறேன்.

ஒன்று முந்திய மீன்பிடி மையங்கள் இன்றும் கடற்படை வசமே உள்ளன. விடுவிக்கப்பட்ட இடங்களில் கூட அங்கு போய் குடியிருந்து தங்கள் தொழிலை மீனவர்கள் மேற்கொள்ளும் வகையில் வசதிகள் செய்யப்படவில்லை. இராணுவத்தினராலும் கடற்படையினராலும் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் களையப்படவில்லை.

அடுத்தது தென்னிலங்கை மீனவர்களின் ஆக்கிரமிப்பும், அவர்கள் கடற்படையினர் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரின் மறைமுக ஆதரவுடன் மேற்கொண்ட சட்டவிரோத மீன்பிடி முறைகளுமாகும்.

இந்த இரு காரணங்களும் நாட்டின் கடலுணவு உற்பத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் எமது கடல்வளம் படிப்படியாக அழிந்துபோகும் ஆபத்தையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இன்னொருபுறம் எமது மீனவ மக்கள் தமது வாழ்வாதாரத்தை அழித்து வறுமையில் வாடவேண்டிய நிலையும் நமது பாரம்பரிய மீன்பிடித் தொழிலைக் கைவிட்டு வேறு தொழில்களை நாடவேண்டிய நிலையும் எழுகிறது.

## சீவல் தொழிலை சீரழிப்பதை அனுமதிக்க முடியாது

மதுவுக்கு முற்றுப்புள்ளி என்பது சாத்தியமாவென இச்சபையில் கேட்டுவைக்க விரும்புகிறேன். ஆனால் மதுவுக்கு முற்றுப்புள்ளி என்ற கோசம் இனவாத அடிப்படையில் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள உழைக்கும் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதாவது தென்னை, பனை ஆகிய மரங்களில் கள் இறக்குவது தடைசெய்யப்படவுள்ளதாக வர்த்தகமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. வடக்கில் 20000 குடும்பங்கள் சீவல் தொழிலை தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்கின்றன. ஆனால் சிங்கள மக்களால் உற்பத்தி செய்யப்படும் கித்துள் கள்ளுக்கு இத் தடை விதிக்கப்படவில்லை வடபகுதி மக்களின் கடும் எதிர்ப்பை அடுத்து அவ்வறிவித்தல் தவறுதலாக வெளியிடப்பட்டதாகக் கூறப்பட்டு மீளப்பெறப்பட்டது. ஆனால் கள்ளிறக்குவதற்கான அனுமதி மதுவரித் திணைக்களத்திடமோ அல்லது பிரதேச செயலரிடமோ பெறப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அப்படியான அனுமதி பெறப்படும்போது அதற்கான வரி அறவிடப்படும். அப்படியான நிலையில் தவிர்க்க முடியாதபடி கள்ளின் விலை அதிகரிக்கபட வேண்டிவரும். இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட அதே வேளையில் பியரின் விலை குறைக்கப்பட்டது.

கள்ளின் விலை கூடும்போது, பியரின் விலை குறையும்போது கள் விற்பனை வீழ்ச்சியடைவது தவிர்க்க முடியாது. பியர் விலை குறைக்கப்பட்டதுமே தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படும் போத்தலில் அடைத்த கள்ளின் விலை 40 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இப்படியான நடவடிக்கை போலியான மது ஒழிப்புக்கோசத்தின் பின்னால் தமிழ் மக்களின் பொருளாதாரத்தை பின்னடையச் செய்யும் முயற்சியாகவே நாம் பார்க்கிறோம்.



நிற்சாமம் ஞானவைரவர் விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கியமை





யாழ் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய பரிசளிப்பு மற்றும் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், உதயன் பத்திரிகையின் நிர்வாக இயக்குநருமான ஈ.சரவணபவன் ஊக்கமும், விடாமுயற்சியும், கடும் உழைப்பும் மிக்க ஒருவராகவே அவர் எப்போதும் என் மனதில் தோன்றுகின்றார். தன்னுடைய எத்தனங்களினால் வெற்றியீட்டுவதற்காகத் தளராது சமராடும் ஒரு வீரராக அவரைப் பார்க்கின்றேன். உண்மையில் அப்படி அவர் ஜெயம் பெற்றுமிருக்கின்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனது மக்களுக்கான நிறைவான சேவைகளையும் முழு திருப்திதரும் வகையில் மிகுந்த கவனிப்புடனும் அக்கறையுடனும் அவர் மேற்கொண்டு வந்துள்ளார். அந்தப் பணியை திடசங்கற்பம் மற்றும் பற்றுறுதியுடன் அவர் நிறைவு செய்து வருகி-றார் என்பது வெளிப்படையானது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் என்ற முறையில் அதனைச் சாதுரியமாக நிர்வகிப்பதில் அவர் முகம் கொடுக்கும் சவால்கள் மிகக் கடினமானவை, சிக்கலானவை, தேர்ந்த வல்லமையுடன் எதிர்கொள்ள வேண்டியவை.

பத்திரிகையாளர் மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் மீதான நேரடித் தாக்குதல்கள் உட்பட ஊடக சுதந்திரத்துக்கு எதிரான அடக்குமுறை எல்லையில்லாமல் தலைவிரித்தாடும் ஒரு சூழலுக்கு மத்தியில் சுயாதீனம் என்ற தனித்துவத்தை விட்டுக்கொடாமல் தொடர்ந்து வெற்றிகரமாகப் பேணியாடி ஒரு பத்திரிகையை நடுநிலை தவறாது கொண்டு நடத்துவது என்பது ஓர் இமாலய சாதனையன்றி வேறில்லை.



திரு.சரவணபவன் தாம் ஈடுபடுகின்ற துறையின் கடின உழைப்பை நல்கி, தன்னை அர்பணித்து நிற்கின்ற ஒருவராவார். உதயன் நிறுவனத்தையும் உதயன் நாளேட்டையும் ஆட்சியாளர்களினதும் இராணுவ ஆதிக்கத்தினதும் அடக்குமுறை, அழிப்பு நடவடிக்கைகள், கொலை அச்சுறுத்தல்கள் என்பவற்றில் இருந்து பாதுகாத்து வளர்த்தெடுத்து மக்களின் கருத்துச் சுதந்திரத்தை மேம்படுத்தி நிற்பதில் அர்ப்பணிப்பையும், துணிச்சலையும் வெளிப்படுத்தி நிற்கின்ற ஒருவராவார். அதற்கும் மேலாக "தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலை" என்ற உன்னத இலட்சியத்திற்காக அயராது இலக்ககுத் தவறாது மக்களை கட்டியெழுப்புவதில் உதயன் குழுமம் பெரும் பங்காற்றுகிறது.

ஊடகசுதந்திரம் இலங்கையில் அடக்குமுறைக்கு உள்ளானபோதும் அந்தச் சுதந்திரத்தை நிலைநாட்ட உதயன் குழுமம் பெரும் அர்ப்பணத்தைச் செய்திருக்கிறது. அதுபோல தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதிலிருந்தும் மக்கள் மத்தியில் திரு.சரவணபவன் பெரும் சேவையாற்றி வருகிறார்.

பாதிக்கப்பட்ட, துன்பப்பட்ட மக்கள் மத்தியில் உதவும் நிறுவனங்களிடம் தொடர்புகொண்டு பல நலத்திட்டங்களை நிறைவு செய்து வருகிறார். திரு.சரவணபவன் உதயன் குழுமத்தையும், செய்தியாளர்களையும் கூட மக்கள் சேவைக்காகவே செயற்பட வைக்கிறார். உதயன் குழுமத்துக்கு நெருக்கடிகள் ஏற்பட்டபோது அவற்றை துணிச்சலுடன் எதிர்கொண்டு தீர்வுகண்டு வெற்றிபெற்ற ஒரு உழைப்பாளர் என்று குறிப்பிடலாம்.

# அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் நாடாளுமன்றில் சரவணபவன் முழக்கம்

## (02.29.2018 அன்று ஆற்றிய உரையின் ஒரு பகுதி)

அனுராதபுரத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் தங்களைப் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கும்படி அல்லது குறுகியகால புனர்வாழ்வு வழங்கி விடுதலை செய்யுமாறு தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். கடந்த 9 வருடங்களுக்கு மேலாக இவர்கள் எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படாமலும் நீதிமன்ற விசாரணைக்கும் உட்படுத்தப்படாமலும் உள்ள நிலையில் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர்.

அரசியல் கைதிகள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டங்களை நடத்துவது இதுதான் முதல்தடவையல்ல. ஒவ்வொரு முறையும் அவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டங்களை நடத்துவதும் அவர்களின் போராட்டங்கள் தொடர்பாக அலட்சியப் போக்கைக் காட்டுவதும் அவர்கள் மரணத்தின் விளிம்பை அடையும் நிலையில் சில வாக்குறுதிகளை வழங்கிப் போராட்டங்களை நிறுத்திவிட்டுப் பின்பு வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விடுவதும், அதற்கும் சட்டக் காரணங்களை முன்வைப்பதும் மீண்டும் மீண்டும் நடை-பெறும் சம்பவங்களாக உள்ளன.

இக்கைதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 2018 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் நியமங்களுக்கு விரோதமானது எனவும் அது நீக்கப்பட வேண்டும் எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கு இலங்கையும் அனுசரணை வழங்கியிருந்தது. அதாவது பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால் தற்சமயம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நான்கு வருடங்கள் நெருங்கும்போதும் அந்த மனிதகுல விரோதச் சட்டம் நீக்கப்படவில்லை.

அதுமட்டுமின்றி அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதும் இலங்கை அரச தரப்பால் நீக்கப்படவுள்ளதாக ஒப்புக்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்தான். மேலும் கைதிகள் விடுதலை தொடர்பாகப் பிரச்சினைகள் முன்வைக்கப்படும்போது இச்சட்டமே காண்பிக்கப்படுகின்றது. எனவேதான் அரசியல் கைதிகள் விவகாரம் நியாயத்தின் அடிப்படையில் நோக்கப்படாமல் இனக்கு-ரோத அடிப்படையிலேயே நோக்கப்படுவதாக நாம் கருதுகிறோம்.

ஒரு ஜனநாயக நாட்டுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உறுப்புரிமை கொண்ட ஒரு தேசத்துக்கு இப்படியான மனித குல விரோத, இனக்குரோத அடிப்படையிலான போக்கு எள்ளவும் பொருத்தமற்றதென்றே நாம் கருதுகிறோம்.

அதாவது எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியின்போதும் ஒவ்வொரு காரணம் கூறப்பட்டு நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டு வருவதை நாம் அவதா-னிக்க முடியும். ஆனால் உண்ணாவிரதமிருக்கும் கைதிகள் ஒவ்வொரு நிமிடமும் மரணத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். காலதாமதம் செய்யப்படும் ஒவ்வொரு நாட்களும் அவர்கள் சாவை நோக்கித் தள்ளப்படும் நாட்களே! அதிலும் ஒரு கைதி சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார். இன்னொருவர் ஏற்கனவே பாரிசவாதப் பாதிப்புக்கு உள்ளானவர் என்றும் அவர் மீண்டும் அதே ஆபத்துக்கு உட்படும் ஆபத்து உண்டு எனவும் கூறப்படுகின்றது. ஆனால் அரச தரப்பினர் கைதிகளின் உயிராபத்து நிலை தொடர்பாகவோ எதிர்கொள்ளக்கூடிய மரணம் பற்றியோ பொருட்படுத்துவ-தாகத் தெரியவில்லை.

எனவே ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் உடனடியாக இப்பிரச்சினையில் தலையிட்டு பொது மன்னிப்பின் கீழ் கைதிகளை விடுவிக்க வேண்டும். இல்லையேல் குறுகியகால புனர்வாழ்வில் அவர்களை விடுதலை செய்ய வேண்டும். அவர்களுக்கு உயிரா-பத்து ஏற்படும் வரை விட்டு விட்டு அவர்கள் ஏற்கனவே இருந்த நோய் காரணமாகவே இறந்தனர் என்றோ இயற்கை மரணம் என்றோ காரணங்களைக் கண்டுபிடித்து முன்வைப்பதில் அர்த்தமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வளர்ந்து வரும் ஒரு சமுதாயத்தில் போக்குவரத்து அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாகி விட்டது. கிராமங்கள் நகரங்களுடனும், கிராமங்களை ஒன்றுடன் ஒன்றையும் இணைப்ப-தும், நாளாந்த தேவைகளை நோக்கி நகரவும் தேவைப்படுவது வீதிகளே! எனவே வீதிகள் எமது உறவுகளின் பாலங்கள் எமது தேவைகளின் மையங்கள் இவை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களால் எமது மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு செய்து மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டங்கள்**



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி மத்தி திகிரி வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் துணவி பாடசாலை வீதி புனரமைக்கப்பட்டமை



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் வறுத்தோலை வீதி புனரமைக்கப்பட்டமை



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கரத்தை கலட்டி 2ஆம் ஒழுங்கை புனரமைக்கப்பட்டமை



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டு தெற்கு கார்த்திக்கேசு வித்தியாலய வீதி புனரமைக்கப்பட்டமை



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டு தென்மேற்கு திக்கிராய் வீதி புனரமைக்கப்பட்டமை



**22** லட்சத்து 50000 ரூபா நிதி ஒதுக்கீட்டில் பண்ணாகம் மெய்கண்டான் காசா வீதி புனரமைக்கப்பட்டமை



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி தெற்கு V.C வீதி முதல் காளி கோவில் வீதி வரை புனரமைக்கப்பட்டமை



மக்கள் கருத்தறிதல்



பொன்னாலைப் பகுதி மக்களின் குறைகேள் சந்திப்பில் ஈ சரவணபவன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டுதென்மேற்கு சின்னமணியகாரன் வீதி புனரமைக்கப்பட்டமை



சுழிபுரம் நெல்லியான் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட பாலம் வட்டுக்கோட்டையின் தலைமகனால் திறந்து வைக்கப்பட்டது



20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டுதென்மேற்கு பேக்கரி வீதி புனரமைக்கப்பட்டமை



10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை பேச்சி அம்மன் வீதி புனரமைக்கப்பட்டமை



10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் பச்சந்தை வீதி புனரமைக்கப்பட்டமை



10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை மாணிக்கவத்தை சட்டம்பியார் வீதி புனரமைக்கப்பட்டமை



10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை விக்கினேஸ்வரா வீதியின் முதலாம் ஒழுங்கை புனரமைக்கப்பட்டமை



10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டு தென்மேற்கு திக்கரை வீதி புனரமைக்கப்பட்டமை



20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டு தெற்கு இத்தியடி 3ஆம் வீதி புனரமைக்கப்பட்டமை



22 லட்சத்து 75000 ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டு தென்மேற்கு நல்லை மாவடி வீதி புனரமைக்கப்பட்டமை



20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை கரைச்சி இந்து மாயான வீதி புனரமைக்கப்பட்டமை



15 லட்சத்து 65000 ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை கரைச்சி மாயான வீதி புனரமைக்கப்பட்டமை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மூளாய் வைரவர்கோயில் வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை குடியேற்றத்திட்ட வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பனிப்புலம் செட்டி குறிச்சி வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பனிப்புலம் காலையடி குஞ்சன் கலட்டி வீதி புனரமைக்கப்பட்டமை



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி ஒடைக்காடு (செந்தமிழ் சனசமூக நிலையம் அருகாமை) வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை தொட்டிலடி கட்டுப்புலம் வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் திருவடிநிலை ஆரம்ப பாடசாலை வீதி புனரமைக்கப்பட்டமை



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தொல்புரம் கண்டாமை வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தொல்புரம் பத்தானை கேணி வீதி புனரமைக்கப்பட்டமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை ஆதார வைத்தியசாலை உள்ளக வீதி புனரமைக்கப்பட்டமை



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை தொட்டிலடி கண்ணன் முன்பள்ளி வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் வெள்ளவாய்க்கால் வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் ஆலம் ஓடை வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை நிற்சாமம் சாத்தனாவத்தை வீதி புனரமைக்கப்பட்டமை



தொல்புரம் ஞான வைரவர் கோவிலடி வள்ளுவர் சனசமூக நிலையத்தில் மக்கள் குறை கேள் சந்திப்பில் ஈ. சரவணபவன் அவர்கள்



**30** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை அம்பிகாவத்தை வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை விழிசுட்டி உள்வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை பிளக் வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை விழிசுட்டி வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கல்விளான் குறுக்கு வீதி புனரமைக்கப்பட்டமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி மேற்கு வேலங்காடு வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தொல்புரம் மடத்துப் பிள்ளையார் மில் வீதி புனரமைக்கப்பட்டமை



**11** லட்சத்து 20000 ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டு கிழக்கு சித்தங்கேணி தாவளை வீதி புனரமைக்கப்பட்டமை



**40** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கல்லை வேம்படி தொடக்கம் பாண்டவெட்டடை வரையான வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பண்டாவோடை வீதி புனரமைக்கப்பட்டமை



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாயல வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி மத்தி கணவத்தை வீதி புனரமைக்கப்பட்டமை



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மூளாய் காளிகோவில் முன் வீதி புனரமைக்கப்பட்டமை



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி மத்தி சிவன் கோவில் வீதி புனரமைக்கப்பட்டமை



சங்கானை மாவடி பகுதியில் சாதனையாளர் கௌரவிப்பு



**5** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் பெரியபுலவு ஆலய புனரைமைத்தமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**14** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி கிழக்கு கலைமகள் சனசமூக நிலையம் அபிவிருத்தி செய்யப்பட்டமை



**1** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கரத்தை YMHA கட்டடம் அபிவிருத்தி செய்யப்பட்டமை



**1** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் குடாக்கனை சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டமை



சங்கானை சலேசியர் முன்பள்ளிக்கு மின்சார இணைப்பு, தளபாடங்கள் வழங்கியமை



**1** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை விழிசிட்டி சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டமை



**9** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டு தென்மேற்கு ஐக்கிய சங்க அபிவிருத்தி செய்யப்பட்டமை



**5** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் துணைவி வளர்மதி முன்பள்ளிக்கு நீர்த்தாங்கி அமைத்துக் கொடுத்தமை



**2** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டு தென்மேற்கு இளைஞர் சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டமை



**1** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டுத்தெற்கு செம்பாட்டான் தோட்டம் அம்பாள் சனசமூக நிலையம் அபிவிருத்தி செய்யப்பட்டமை



**1** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை நிகரை அம்பாள் சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



13 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை மாவடி கலாச்சார மண்டபம் அபிவிருத்தி செய்யப்பட்டமை



10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் கிழக்கு முதியோர் சங்க கட்டடம் அபிவிருத்தி செய்தமை



5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் மத்தி அம்பாள் விளையாட்டுக்கழகம் அபிவிருத்தி செய்யப்பட்டமை



3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மூளாய் இந்து இளைஞர் முன்பள்ளிக்கட்டடம் புனரமைக்கப்பட்டமை



நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் முதலிகோவிலடி அம்பாள் சனசமூக நிலையத்திற்கு கதிரைகள் வழங்கியமை



15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பல்லசுட்டி காந்திஜி கலையரங்கம் அமைக்கப்பட்டமை



5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பண்ணாகம் அம்பாள் சனசமூக முன்பள்ளிக்கு சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டமை



2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை சரஸ்வதி சனசமூக நிலைய முன்பள்ளிக்கு சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டமை



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் முயற்சியால் வலி.மேற்கு பிரதேச சபைக்கு இந்துசமய அலுவல்கள் அமைச்சில் இருந்து பெற்ற வாகனத்தை கையளித்தமை



2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் பறாளை விளையாட்டுக்கழக கட்டடம் அபிவிருத்தி செய்யப்பட்டமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**15** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தொல்புரம் மத்திய சனசமூக நிலைய முன்பள்ளிக்கு சிறுவர் பூங்கா அமைத்து வழங்கியமை



**2** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பொன்னாலை கண்ணன் சனசமூக நிலைய எல்லை அமைத்து வழங்கியமை



நிதி ஒதுக்கீட்டில் அராலி தெற்கு உதயசூரியன் விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கியமை



மூளாய் மனிதவள முன்பள்ளிக்கு தளபாடம் வழங்கியமை



**5** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி வடக்கு சில்வர்ஸ்டார் விளையாட்டுக்கழக சிறுவர் பூங்கா அமைத்தமை



**2** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தொல்புரம் வள்ளுவர் சனசமூக நிலைய கட்டடம் புதுப்பிக்கப்பட்டமை



**1** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டுக்கோட்டை கிராம அபிவிருத்திச் சங்க கட்டிடம் புதுப்பிக்கப்பட்டமை



வட்டு வடக்கு கற்பகச்சோலை சனசமூக நிலையத்திற்கு தளபாடங்கள் வழங்கியமை



**2** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டு வடக்கு நேருஜி சனசமூக நிலைய கட்டடம் அபிவிருத்தி செய்யப்பட்டமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கரத்தை திருவளக்கை பிள்ளையார் வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கரத்தை பாடசாலை வீதி புனரமைக்கப்பட்டமை



**15** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டு கிழக்கு அந்திரான் 2 ஆம் வீதி புனரமைக்கப்பட்டமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கரத்தை கள்ளி வீதி 2ஆம் ஒழுங்கை புனரமைக்கப்பட்டமை



**1** லட்சத்து 20000 ரூபா நிதி ஒதுக்கீட்டில் துணவி அ.மி.த.க. பாடசாலைக்கு போட்டோ கொப்பி இயந்திரம் வழங்கியமை



**15** லட்சம் ரூபா ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட அராலி ஸ்ரீமுருகன் சனசமூகநிலைய முன்பள்ளி திறப்பு விழா



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ சரவணபவன் அவர்களால் சுழிபுரம் விவேகானந்தாவிளையாட்டு கழக புனரமைப்பு பணிக் காகவும் அப்பகுதி வீதி புனரமைப்பு பணிக்காகவும் ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேலதிகமாக நிதி ஒதுக்கீடு செய்தமைக்காக அப்பகுதி மக்கள் பாராட்டி கௌரவித்தனர்.



மூதறிஞர் தந்தை செல்வநாயகத்தின் பிறந்தநாளில் வட்டுக்கோட்டை தொகுதி இலங்கை தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பண்ணிசைப்போட்டியும் பரிசளிப்புவிழாவும்




**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் காளிகோவில் வீதி புனரமைக்கப்பட்டமை



அராலி மத்தி பொங்கல் விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்ணாகத்தின் மைந்தனும் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் திருவுருவச்சிலை அமைத்தமை





மறைந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் நினைவுதினம் அனுட்டிக்கப்பட்டது



சுழிபுரம் பெரியபுலோ அண்ணா கலைமன்றிற்கு உபகரணங்கள் வழங்கப்பட்டமை



தொல்புரம் வீராவத்தை மக்களது குறைகேள் [illegible]



15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு புதிய கட்டடம் அமைத்தமை



2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் நாவலர் சனசமூக நிலைய அபிவிருத்தி



2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டு வடக்கு கற்பகச் சோலை அரங்கு புனரமைக்கப்பட்டமை



நிதி ஒதுக்கீட்டில் தொல்புரம் சக்தி முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டமை



2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி வடக்கு இந்து மயான புனரமைக்கப்பட்டமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலய மைதானத்திற்கு சுற்று மதில் அமைத்தமை



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாலய மைதானத்திற்கு சுற்று மதில் அமைத்தமை



**5** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி தெற்கு சரஸ்வதி வித்தியாலய மைதானம் அபிவிருத்தி செய்யப்பட்டமை



மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு திறன் வகுப்பறை திறப்பு விழாவில்



**1** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டுக் கிழக்கு சித்தங்கேணி தாவளை சைவத்தமிழ் வித்தியாயலத்திற்கு சுகாதார வசதிகள் மேம்படுத்தியமை




**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மைதானத்திற்கு திறந்தவெளி அரங்கு, சுற்றுமதில் அமைத்து வழங்கப்பட்டமை



**5** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சித்தங்கேணி ஸ்ரீ கணேசா பாடசாலை சிறுவர் பூங்கா அமைத்து வழங்கியமை



**1** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலைக்கு சுகாதார வசதிகள் மேம்படுத்தியமை



**20** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை வைத்தியசாலை முன்வீதியின் கிளை வீதிகள் புனரமைத்தமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தொல்புரம் போக்கன்கலட்டி வீதி புனரமைத்தமை



10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலய மைதானம் அபிவிருத்தி செய்யப்பட்டமை



1 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கரத்தை சின்னம்மா பாடசாலை சுகாதார வசதிகளை மேம்படுத்தியமை



வட்டு வடக்கு சுப்பிரமணிய வித்தியசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கியமை



2 லட்சத்து 65000 ரூபா நிதி ஒதுக்கீட்டில் சா[illegible] வித்தியாலய அபிவிருத்தி, உபகரணங்கள் வழங்கப்பட்டமை



5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பொன்னாலை வரதராஜா வித்தியாயலத்திற்கு சுற்று மதில் அமைத்து வழங்கியமை



1 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் திருவடிநிலை சைவத்தமிழ் கலவன் பாடசாலை சுகாதார வசதிகளை மேம்படுத்தியமை



1 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி மத்தி முருகமூர்த்தி வித்தியாலயம் அபிவிருத்தி மேற்கொண்டமை



3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் காட்டுப்புலம் அ.த.க. பாடசாலைக்கு விளையாட்டுப்பூங்கா அமைத்தமை



சித்தங்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய பரிசளிப்பு விழாவில்...



அராலி மத்தி உலோசிட்டி விநாயகர் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவு சங்கத்திற்கு உபகரணங்கள் வழங்கப்பட்டமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தொல்புரம் கொட்டம்பதி ஆதி முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு சூரிய படல் வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தமை



**5** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மூளாய் வேரம் அக்கினி வைரவர் கோவில் புனரமைத்தமை



**4** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டு தென்மேற்கு அத்தியடிப் பிள்ளையார் ஆலயம் புனரமைத்தமை



**5** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பொன்னாலை வரதராஜா பெருமான் தேவஸ்தானத்திற்கு சூரியபடல் வசதிகள் மேற்கொண்டமை



**5** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானத்திற்கு சூரியபடல் வசதிகள் வழங்கியமை



**5** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி தெற்கு அகாயக்குளம் ஆலய சுற்றுமதில் புனரமைத்தமை



**10** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி தெற்கு கறுப்பிட்டி பிள்ளையார் கோவில் அன்னதான மண்டபம் புனரமைத்தமை



**4** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி மத்தி மகமாஜி அம்மன் ஆலயம் புனரமைத்தமை



**5** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மூளயம்பதி அருள்மிகு ஹரிகர புத்திர ஐயனார் ஆலயம் புனரமைக்கப்பட்டமை



**5** லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கரத்தை தெவிண்டப் பிராய் முருகமூர்த்தி தேவஸ்தானம் புனரமைக்கப்பட்டமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



3 லட்சம் ரூபா நிதி ஒது க்கீட்டில் அராலி மேற்கு மீனாட்சி அம்மன் ஆலயம் அபிவிருத்தி



3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் குடாக்கனை ஆலய மண்டபம் அமைத்துக் கொடுத்தமை



2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி கிழக்கு இந்தனை வைரவர் ஆலயம் புனரமைத்தமை



2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டு தென்மேற்கு இலுப்பையடி வைரவர் ஆலயம் புனரமைக்கப்பட்டமை



20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுழிபுரம் பாண்டவெட்டை வீதி புனரமைக்கப்பட்டமை



5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சங்கானை விழிசுட்டி ஞானவைரவர் ஆலய எல்லைச்சுவர் அமைத்தமை



20 லட்சம் ரூபா நிதி ஒது க்கீட்டில் சுழிபுரம் ஆலம் ஒடை வீதி புனரமைத்தமை



2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வட்டு தெற்கு பரமகுரு ஸ்ரீ முதலியப் பெருமாள் ஆலயம் அபிவிருத்தி



2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் காக்கியம்பதி எல்லைச்சுவர் அமைத்தமை



10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி தெற்கு ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலயம் அபிவிருத்தி



15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அராலி கிழக்கு ஐயனார் ஆலயம் அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலை வளம் நிலைத்திருக்கும் வலிகாமம் மேற்கு

**வலி மேற்கு கிராமியக்கலைகள், நவீன கலைகள், ஓவிய, சிற்பக்கலைகள், நாதஸ்வர இசைக்கலைகள், நவீன நாதஸ்வர இசைக்கலைஞர்கள் எனப் பெரும் கலைஞர்களினதும் பெரும் பட்டியலைக் கொண்டது. வட்டு மோடி என்ற தனித்துவமான கூத்து வடிவத்தை கொண்டிருப்பது வட்டுக்கோட்டை பிரதேசத்தின் தனித்துவமாகும். இதை சிந்துபுர கூத்து எனவும் அழைப்பதுண்டு.**

யாழ்ப்பாணக்கூத்து மரபுகளில் வட்டுக்கோட்டைக் கூத்தர்களுக்கு முக்கியமான இடமுண்டு. பாரம்பரியக் கூத்துக்கள் வட்டக்களரியில் ஆடப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை பல்கலைக்கழகத்துக்குள்ளும் எடுத்துரைத்த வரலாறு அவர்களுடையது. இந்த வகையில் முருகவேள் மாஸ்ரர் முதன்மையானவராகின்றார். இப்பொழுது க.நாகப்பு வட்டுக்கோட்டைக் கூத்தின் வரலாற்றை நூலாகக்கொண்டு வருகின்றார்.
இது மிகவும் முக்கியமான செய்தி. கூத்தர்களே கூத்துப்பற்றியும் கூத்து வரலாற்றையும் எழுதுவது. எழுத்து வடிவில் கொண்டுவருவது ஈழத் தமிழர் தம் புலமை மரபில் முக்கியத்துவமுடைய விடயமாகும்.

சி.ஜெயசங்கர்
முதுநிலை விரிவுரையாளர்
நுண்கலைத்துறை
-கிழக்குப் பல்கலைக்கழகம்

சங்கானை, அராலி, சுழிபுரம், பண்ணாகம் முதலிய கிராமங்களில் நாடகக்கலை வளர்பிறைபோல் வளர்ந்து வருகின்றது. பொதுவாக நோக்கில் எல்லாக் கிராமங்களிலும் கலைத்திறன்மிக்க இளைஞர்களும் மங்கையரும் இலைமறைகாய் போல் அங்குமிங்குமாகக் காணப்படுகின்றனர். அவர்களுக்கு கலை உணர்ச்சிகளை உருவகப்படுத்துவதற்கு ஏற்ற வாய்ப்புகளும் வேண்டிய பயிற்சியுமளிப்பதற்கென எங்கள் மன்றம் திட்டமிடப்பட்டுள்ளது.

சோ.அருணாசலம்
உதவி அரசாங்க அதிபர், வலி-மேற்கு


கலாபூசணம் கந்தையா நாகப்பு

கலைமகள் குடியிருக்கும் ஆலயமாக விளங்கும் வட்டுக்கோட்டையில் "வட்டுமோடி" என்ற வகையில் அடங்கும் துரமபுத்திரன் கூத்து, விராடன் கூத்து, அருச்சுனன் கூத்து, தபசு, குருகேந்திரன் கூத்து போன்றவை தனித்துவமானவை இக்கூத்து வடிவங்களைத் தேடிப் பிரதியாக்கி அவற்றை முன்னெடுத்தவர் ஆசிரியர் முருகவேள். அவரின் வழி வந்தவர்தான் அமரர் கந்தையா நாகப்பு. வட்டுமோடிக் கூத்துகளை இளைய தலைமுறையினருக்குப் பழக்கி மேடையேற்றி வந்ததன் ஐந்து தலைமுறைகளாக ,க்கூத்துகள் மெருகுகுன்றாமல் ஆடப்படுகின்றன.

இவர் சிறந்த அண்ணாவியராகவும், கூத்தராகவும் விளங்கும் அதே வேளையில் நல்ல ஓவியக் கலைஞராகவும், சிற்பங்கள் செய்பவராகவும் இலக்கியவாதியாகவும் விளங்கிவந்தார். பொய்க்கால் குதிரையோட்டம், காவடியாட்டம், கரகாட்டம் போன்ற கலைகளை வளர்ப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். இப்போதும் இவரின் பிள்ளைகளான குமரன், மணிவண்ணன் ஆகியோர் பொய்க்கால் குதிரையாட்டம், காவடியாட்டம், கரகாட்டம் போன்ற கலைகளை ஆற்றுகை செய்து எமது பாரம்பரியக் கலைகளைப் பாதுகாத்து வருகின்றனர்.

"வட்டுக்கோட்டைக் கூத்தும் கிராமியக் கலைகளும் என்ற இவரது நூல் ஒரு அரிய பொக்கிசமாக கருதப்படுகிறது."

இவருக்கு கலாபூஷணம், கலைவாரிதி போன்ற பட்டங்கள் வழங்கப்பட்டதுடன் இவர் ஆளுனர் விருதும் பெற்றிருந்தார்.

## பாரம்பரிய கலைகளை பாதுகாக்கும் வட்டுக்கோட்டைத்தொகுதி



ஒரு தேசிய இனத்தின் அடையாளங்களாக மொழி, பொருளாதாரம், வாழிடம், கலாசாரம் என்பன வரையறுக்கப்படுகின்றன. அவ்வகையில் கலாசாரம் சார்ந்த பாரம்பரிய கலைகளான நாட்டுக்கூத்து, காவடியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், கோலாட்டம், கரகாட்டம், நாதஸ்வர தவில் கலைகள், சிற்பம், ஓவியம் என்பன எமது வட்டுக்கோட்டைத் தொகுதியில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. இதய சுத்தியுடன் எமது இன அடையாளம் இக்கலைகள் மூலம் நிலைநிறுத்தப்படுவதை எண்ணி பெருமையடைகிறேன். எமது கலை வளர்ச்சிக்கு என்னாலான முழுப்பங்களிப்பையும் வழங்குவேன் என்பதை உறுதி செய்கிறேன்.

ஈஸ்வரபாதம் சரவணபவன்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

## காலத்தால் அழிக்க முடியாத கிராமிய கலைக்கூத்தும் நாட்டார் பாடல்களும்



வட்டுக்கோட்டையில் வீரகத்தி அண்ணாவியார். அண்ணாமலை அண்ணாவியார் என்றால் தெரியாதவர்கள் இல்லை. தனது 78ஆவது வயதிலும் தாளம் தப்பாமலும் சுருதி பிசகாமலும் நம்மை அசத்துகின்றார் கந்தன் வீரகத்தி அண்ணாவியார்.

அதேபோன்று அண்ணாமலை அண்ணாவியார். அறுபதுகளைக் கடந்துவிட்டாலும் நாடகம். வாய்ப்பாட்டு மற்றும் தோல் வாத்திய விற்பன்னராகவும் இருப்பவர் மாரிமுத்து அண்மையகால அண்ணாவியார். அராலியில் வசிக்கும் இவர்கள் சகலகலாவல்லுநர்களாகவே இருக்கின்றனர்.
நான் ஒன்றும் பெரிதாகப் படிக்கவில்லை. எனக்கு இந்தக் கலை எனது 12 வயதிலேயே ஏற்பட்டது. அப்போது பெரியவர்கள் கதை சொல்வார்கள். கதையைப்பாடலாகவேபாடிவிளக்குவார்கள். பின்னர்நாட்டிய நாடகமாக நாட்டுக்கூத்தாக மேடையேற்றுவார்கள். இதனால் எனது காலத்தை இக் கலை ஆர்வத்துடனேயே கழித்துவிட்டேன். பல நாடகங்களையும் கூத்துக்களையும் எழுதி இசை அமைத்து மேடையேற்றி உள்ளேன் என்கிறார் வீரகத்தி அண்ணாவியார்.

விருதுகளையும் பட்டங்களையும் பெற்றவர் அண்ணாமலை அண்ணாவியார். அண்ணாமலை அண்ணாவியார் யுத்தகாலத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வினால் இடையில் சில காலம் தடைப்பட்டபோதும் மீண்டும் அராலிக்கு வந்து 'முத்தமிழ் கலைக் கலாமன்றம்' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தக் காரணியாக இருந்துள்ளார். அது செயல் இழந்துவிட்டதால் அபிராமி கலைக்கலாமன்றம் என்ற ஒரு புது அமைப்பை உருவாக்கியபோதும் இளைஞர்களின் ஆர்வமின்மையால் இதனைப் பதிவுசெய்யக்கூட முடியாமல் போய்விட்டது என கவலைப் படுகின்றார்.
2013ஆம் ஆண்டு உள்ளூராட்சி வார இறுதி விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.
2016ஆம் ஆண்டு திருமறைக் கலாமன்றம் கூத்துக் கலைக்கூடல் விருது பெற்றுள்ளார்.
2018ஆம் ஆண்டு வலி.மேற்கு பிரதேச கலாசார பேரவையில் தோல்வாத்திய இசைக் கான கலை வாத்தியப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.


கரகாட்டம் நாகப்பு குமரன்


காவடியாட்டம் நாகப்பு மணிவண்ணன்


பொம்மலாட்டம் சிந்துபுரக்கலைஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழின் புலுகர் பொன்னம்பலம் நாடகத்தின் மூலம் புகழ்பெற்ற சங்கநாதன்



வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் கலை வளர்ச்சியில் இன்னும் ஒரு முக்கிய இடத்தை வகிப்பது சங்கானை. இந்த மண்ணில் தான் சங்கநாதன் எனப்புகழ் பெற்ற சுப்பிரமணியம் சற்குணநாதன் வாழ்ந்து கலைப்பணிகளை மேற்கொண்டு வந்தார். ஈழத்து மேடை நாடகத்துறையில் இவர் ஒரு சகலகலா வல்லவராக விளங்கினார். நடிகர், பாடகர், கவிஞர், பிரதியாக்குனர், நெறியாளன் என பல முனைகளில் தனது ஆற்றலை வெளிப்படுத்திய இவரை ஓல்ரவுண்டர் என ரசிகர்கள் பாராட்டுவதுண்டு.

அவர் மேடையேற்றிய நாடகங்களுள் புழுகர் பொன்னம்பலம் என்ற நகைச்சுவை நாடகம் மிகவும் பாராட்டுப்பெற்றது. அரிச்சந்திர மயான காண்ட இசை நாடகத்தில் இவரது நடிப்பும், பாடலும் பாடலுக்கேற்ற அபிநயங்களும் இப்பொதும் ரசிகர்காளல் நினைவு கூறப்படுவதுண்டு.

அதே போன்று இவரின் பிள்ளைகளும் தந்தையாருக்கு சளைத்தவர்கள் அல்ல என்று கூறும்படி தாரமான கலைஞர்களாக விளங்கினர்.

இவரது கலைச்சேவைகளைப் பாராட்டி கலை, கலாச்சார பேரவை இவருக்கு நாடக பாரதி என்ற பட்டத்தையும் சங்கானை இந்து இளைஞர் மன்றம் வாழ்நாள் சாதனையாளர், சாதனை நாயகன் என்ற பட்டத்தையும் சிவப்பிரகாசம் கல்லூரி பழைய மாணவர் சங்கம் முன்னோடிக்கலைஞர் என்ற பட்டத்தையும் வழங்கி கௌரவித்துள்ளனர். இவை எல்லாவற்றையும் விட சங்கானை பிரதேசசபை இவர் வாழ்ந்த வீதிக்கு சங்கரநாதன் வீதியெனப் பெயரிட்டு இவரை கௌரவித்துள்ளது.

அவர் தற்சமயம் மறைந்து விட்டாலும் அவருடைய கலைத்துறை சாதனைகள் கலைஞர்களாலும், ரசிகர்களாலும் இன்றுவரை நினைவுகூரப்பட்டு வருகிறது என்பது இவருடைய பெருமைக்கு ஒரு சான்றாகும்.

## பாரம்பரிய வீர விளையாட்டான மாட்டுவண்டி சவாரி



தமிழ்மக்கள்மத்தியில்'ஜல்லிக்கட்டு' எவ்வளவு பிரபலமானதோ அதேபோன்று வட்டுக்கோட்டையில் மாட்டு வண்டி சவாரி முக்கியத்துவம் பெற்றுள்ளது. அராலி மேற்கில் சுமார் 15 சோடி சவாரி மாடுகள் வளர்க்கப்படுகின்றன. வெளியில் இருந்து பார்ப்பவர்கள் கைதட்டி ஆரவாரமாக குதூகலம் அடைந்தாலும் நாங்கள் எமது உயிரைப் பணயம் வைத்தே இப்போட்டிகளில் கலந்துகொள்கிறோம் என்கிறார் குமாரசாமி கிருஷ்ணகுமார் என்ற சவாரி வீரர்.

கிருஷ்ணகுமார் 1975ஆம் ஆண்டில் தனது 16ஆவது வயதில் சவாரியில் ஒரு உதவியாள்ராக களம் இறங்கியுள்ளார். இன்று பல சவாரி மாடுகளுக்கும் வண்டிகளுக்கும் உரிமையாளராக இருக்கின்றார். பிரதேச ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் நடைபெற்ற போட்டிகளில் 50 இற்கும் அதிகமான தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.

இந்த சவாரி நாட்டுமாடு, வடக்கன், ஜே.சி.கலப்பு இரு பிறவி மாடு, ஊர் மாடு, வன்னி மாடுகள் எனப் பழக்கப்படுகின்றன. தனிப்பட்ட ஜே.சி.இனமாடுகள் ஒத்துவராது. அதேபோன்று வன்னிமாடுகளும் கட்டுப்பாட்டுக்கு வருவது கடினம் என்கிறார்.

மூன்று வயதைப் பூர்த்தியடையும் மாடுகள் தான் சாவரிக்கான பயிற்சிக்கு உள்வாங்கப்படுகின்றன. பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு மாடுகளும் 450 யார் நிற்காமல் ஓட வேண்டும். ஓடி முடிக்கத் தவறும் மாடுகள் ஒதுக்கப்பட்டுவிடும். இதேபோன்று மூன்று முறை பயிற்சி பெற வேண்டும். அதன் பின்னரே சவாரிக்கு ஏற்றமாடாக அங்கீகரிக்கப்படுகின்றது.

தெரிவுசெய்யப்பட்ட மாடுகளுக்கு காலையும் மாலையும் கடலைமா, நெல்லுமா, புளுங்கல்மா தலா இரண்டு கிலோ வீதம் உணவாகக் கொடுக்கின்றோம். மேய்ச்சலுக்கு விடுவதில்லை. தண்ணீரும் அளவாகவே கொடுக்கின்றோம். ஒரு வண்டியைத் தயார் செய்யஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா தேவைப்படுகின்றது. ஒரு மாடு 11 லட்சம் முதல் 16 லட்சம் ரூபா வரை விலை போகின்றது என்கிறார்.

**எங்கள் மாட்டு வண்டி சவாரிதான் வட்டுக்கோட்டையை அடையாளம் காட்டுகின்றது என்று பெருமையுடன் கூறுகின்றார் சவாரி வீரரான கிருஷ்ணகுமார்.**

## கலைமாமணி பட்டம்பெற்ற கலைஞர் சங்கானை வைரமுத்து சிவபாலன்



